**வீதி அபிவிருத்தி அதிகாரசபை - 2019**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அதிகாரசபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கல்லூரிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் ஆணைக்குழுவின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபை ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கல்லூரி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதிகாரசபையின் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- அதிகாரசபையின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| | உரிய நியமங்களுக்கான தொடர்புகளுடன் இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் பிரகாரம் பெருந்தெருக்களை அபிவிருத்தி செய்யும் போதும், விரிவுபடுத்தும் போதும் மற்றும் அதிவேக வீதிகளை கட்டியெழுப்பும் போதும் கைப்பற்றப்பட்ட ரூபா 84,721 மில்லியன் தொகையான காணிகள் நிதி கூற்றுக்களில் தனியாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இந்த காணிக்கூறுகளுக்குரிய காணி பதிவேடுகளையும் அதிகார சபை பேணியிருக்கவில்லை. | அதிவேக வீதி மற்றும் செயற்திட்டங்களில் நிர்மாணிக்கப்பட்டு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட வீதிகளுக்குரிய காணிகள் கைப்பற்றும் பெறுமதி அந்த வீதிகளை நிர்மாணிப்பதற்கு செலவிடப்பட்ட கொடுப்பனவுகளாக இருந்தமையினால் அக்காணிகளை கைப்பற்றிக் கொள்வதற்கு செலவிடப்பட்ட கிரயம் அதிவேக வீதிகளின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனால் காணியாக தனியாக நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | குறித்த பயன்தரு ஆயட்காலத்துடன் அதிவேக வீதிகள் மற்றும் பயன்தரு ஆயுட் காலம் வரையரையற்ற காணிகள் என்பன நிதிக் கூற்றுக்களில் தனித்தனியாக வெளிப்படுத்தப்பட ல் வேண்டும். |
| (ஆ) | முறையே அதிகார சபைக்குரிய கிரயம் ரூபா 776.98 மில்லியன் தொகையான 227 வாகனங்கள் மற்றும் ரூபா 176.03 மில்லியன் கிரயமான கட்டிடங்கள் 2019 சனவரி 01 ஆம் திகதி வரையில் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த வாகனங்கள் மற்றும் கட்டிடங்கள் தற்போதும் பயன்படுத்தப்படுகின்றது. எனினும் பொதுத்துறை கணக்கீட்டு இலக்கம் 07 இன் பிரகாரம் அந்த சொத்துக்கள் தொடர்பாக நிதிக்கூற்றுக்ளில் வெளிப்படுத்தப்படாதிருந்தது டன் பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் | அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்த்த நடவடிக்கைககள் இந்த பதில் கடிதத்தில் இணைக்கப்பட்டுள்ளது. | பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 03 இன் பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட் காலம் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட வழுக்களை சரிசெய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் அந்த சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் தொடர்பான மதிப்பீடு செய்யப்பட்ட வழுவை சரிசெய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 நியமத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பிரதான பிரிவுகளின் பயன்தரு ஆயுட்காலம் ஒன்றுக் கொன்று வேறுபடும் இடத்து அந்த பிரிவுகளில் ஒன்றுக்கொன்று வேறுபாடான பெறுமானத் தேய்வு விகிதத்தின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு செய்யதல் வேண்டும். எனினும் ஒன்றுக்கொன்று வேறுபாடான பயன்தரு ஆயுட்காலத்துடன் அதிவேக வீதிகளின் அடிப்படை பிரிவுகளுக்காக தொழில் ரீதியான மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு விகிதம் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒன்றுக் கொன்று வெவ்வேறாக இனங்காண்பதற்கான தகவல்கள் கோரப்பட்டுள்ளது. கிடைத்த தகவல்களில் காணப்படுகின்ற குறைபாடுகள் பூர்த்தி செய்யப்பட்டு உரிய தகவல்கள் பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் எதிர்காலத்தில் பெறுமானத் தேய்வு கொள்கையை தீர்மானித்து கணக்குகளில் சரியாக சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 நியமத்தின் 58 ஆம் பிரிவின் பிரகாரம் ஒன்றுக்கொன்று வேறுபாடான பயன்தரு ஆயுட்காலத்துடன் அதிவேக வீதிகளில் அடிப்படை பிரிவுகளுக்காக தொழில் ரீதியான மதிப்பீட்டின் அடிப்படையில் பெறுமானத் தேய்வு விகிதம் தீர்மானிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியாக நலன்கள் கிடைக்காத தெலங்கபாத பொலிஸிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தின் கிரயமான ரூபா 80.8 மில்லியன் மற்றும் அந்த கட்டிடத்தின் வருடாந்த பெறுமானத் தேய்வு ரூபா 4.04 மில்லியன் என்பன அதிகார | கட்டிடத்தின் கிரயத்தில் உள்ளடக்கப்பட்ட தெலங்கபாத பொலிஸிற்காக நிர்மாணிக்கப்பட்ட கட்டிடம் அதிவேக வீதியின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக அதிவேக வீதி பொலிஸ் காவலரன் தொகுதியொன்றாக ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிடம் அதிகார சபையின் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு நேரடியான நலன்கள் கிடைக்காதவைகள் சொத்துக்களாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த |

| | | |
|---|---|---|
| சபையின் கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சொத்தாக காண்பித்தல் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இற்கு உரியதாகும். | முடியாது. |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விஷேட பணிகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற ரூபா 90.18 மில்லியன் கிரயமான உபகரணங்களுடனான வாகனங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற பெறுமானத் தேய்வு கொள்கை நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு உதவி வகைப்படுத்தல் வாகனங்களுக்கான பெறுமானத் தேய்வு கொள்கை எதிர்வரும் நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்துதவற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபை பயன்படுத்துகின்ற சகல சொத்துக்களுக்கும் உரிய பெறுமானத் தேய்வு கொள்கை நிதிக் கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அதிகார சபைக்குரிய A மற்றும் B விதிகளின் மொத்த தூர அளவு 12,210 கிலோ மீற்றர் ஆகவும், 2019 ஆம் ஆண்டு வரை A தரத்தின் 8 வீதிகள் மற்றும் B தரத்தில் 52 வீதிகளுக்குரிய 1,624.24 கிலோ மீற்றர் அளவு மாத்திரம் மூலதனமாக்கப்பட்டிருந்தது. மேலும், 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதி பிரிவு உதவி செயற்திட்டத்தின் மூலம் நிர்மாணித்தல் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட கிரயம் ரூபா 37,040 மில்லியன் ஆன 627.78 கிலோ மீற்றர் வீதியை மூலதனமாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகார சபையினால் வீதிகளை மூலதனமாக்கும் செயற்பாடுகள் 2018 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்துவதற்கு வேலைத் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அந்த வீதிகளின் தகவல்கள் நிறைவேற்று பொறியியலாளரிடம் இருந்து பெற்று அந்த தகவல்கள் கிடைத்ததன் பின்னர் கட்டம் கட்டமாக மீள்மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு முகாமைத்துவம் கலந்துரையாடியுள்ளது. | அதிகார சபைக்குரிய A மற்றும் B வீதிகள் யாவும் மிகவும் விரைவாக மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் II ஆம் பகுதியின் நிர்மாணத்திற்காக 2019 நவம்பர் 04 ஆம் திகதி இலங்கை வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட ரூபா 4,312 மில்லியன் தொகையான கடன் உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 1,500 மில்லியன் நிலையான வைப்பொன்று பிணையாக வைக்கப்பட்டிருந்த போதும் அது மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் போது நிதி அறிக்கைகளில் கணக்கீட்டு குறிப்புக்களின் கீழ் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபை பிணையாக வைத்துள்ள சகல சொத்துக்கள் தொடர்பான தகவல்களும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்கு சொந்தமாக எந்தவொரு கிரயமும் குறிப்பிடப்படாத 351 வாகனங்கள் காணப்பட்ட போதும், இந்த மோட்டார் வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின் பிரகாரம் எதிர்காலத்தில் எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற நடவடிக்கைகள் இந்த பதில் கடிதத்தின் இணைப்பில் காண்பிக்கப்பட்டுள்ளது. | அதிகார சபைக்கு சொந்தமாக எந்தவொரு கிரயமும் குறிப்பிடப்படாத வாகனங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பிரித்தானிய இரும்பு பால செயற்திட்டத்தின் மூலம் மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 242.29 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்கள் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த செயற்திட்டத்தின் மூலம் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 242.29 மில்லியன் பெறுமதியுடைய சொத்துக்களையும் மூலதனமாக்குவதற்கு தேவையான சொத்துக்களையும் மூலதனமாக்குவதற்கு தேவையான தகவல்களை வழங்குமாறு செயற்திட்டத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அந்த தகவல்கள் கிடைத்த பின்னர் கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்படும். | செயற்திட்டங்களில் இருந்து அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட சகல சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | அதிகார சபையின் 05 அதிவேக வீதிகளுக்குரியதாக மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வாக ரூபா 5,775 மில்லியன் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட போதிலும், அதிகாரசபையின் பெறுமானத் தேய்வு கொள்கைகளின் அடிப்படையில் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடுகளின் பிரகாரம் அதன் வருடாந்த பெறுமானத் தேய்வு பெறுமதி ரூபா 5,885 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் அதிவேக வீதிகளின் பெறுமானத் தேய்வு ரூபா 190 மில்லியன் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அதிவேக வீதியின் 05 செயற்திட்டங்களுக்குரிய 2019.12.31 இல் உள்ளவாறு பெறுமானத் தேய்வு கணிப்பிடல் தொடர்பாக ஏற்பட்டுள்ள வேறுபாடுகள் உரிய கணக்குகளில் சரிசெய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது இயலுமான வரை கணித ரீதியான வழுக்களை குறைத்தல் வேண்டும். |
| (ஊ) | வெளிச்சுற்றுவட்ட வீதி செயற்திட்டத்தின் கட்டம் II மற்றும் தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்தின் கட்டம் III இன் மூலம் வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட ரூபா 530.87 மில்லியன் தொகையான கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | வெளிச்சுற்றுவட்ட வீதியின் கட்டம் 2 இன் மூலம் ரூபா 71.15 மில்லியன் கிரயமான வீடுகள் மற்றும் அலுவலக கட்டிடங்கள் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு முறையான பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் இறுதியின் போதே கையளிக்கப்பட்டிருந்த போதும், அதன் சரியான பெறுமதி அதிகார சபைக்கு 2020 ஆம் ஆண்டின் யூன் மாதத்தின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய கிரயம் அந்த மாத நாட்குறிப்பு இலக்கம் 232/J06 இன் மூலம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தங்களில் இருந்து அதிகார சபைக்கு கையளிக்கப்பட்ட சகல சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (எ) | அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் கிரயம் | உள்நாட்டு நிதிய வங்கி செயற்திட்டத்தின் மூலமும் ஏனைய செயற்திட்டமாக | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இயலுமானவரை |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் தேறிய புத்தகப் பெறுமதி முறையே ரூபா 136.89 மில்லியன் மற்றும் ரூபா 54.92 மில்லியன் ஆன 06 வாகனங்கள் கணக்குகளில் இருதடவை பதியப்பட்டிருந்தது. இதனால் நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட வாகனங்களின் பெறுமதி அப்பெறுமானத்தினால் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் போது செயற்திட்டத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டு அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்ட 14 வாகனங்களின் கிரயம் மற்றும் அதற்குரிய திரண்ட பெறுமானத்தேய்வு முறையே ரூபா 494.98 மில்லியன் மற்றும் ரூபா 1.52 மில்லியன் என்பன நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இயந்திர பிரிவின் மூலமும் நிதிப் பிரிவிற்கு ஒரு வாகனம் இரு தடவை அறிக்கையிடப்பட்டமையினால் இந்த வேறுபாடு ஏற்பட்டிருந்தது. உரிய தகவல்கள் நிதிப் பிரிவிற்கு 2020 ஆம் ஆண்டு பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களின் போதே கிடைத்திருந்தமையினால் 2020 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்யப்பட்டதை அறியத்தருகின்றோம். | கணித ரீதியான வழுக்களை குறைக்க வேண்டும். மேலும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேவையான சகல தகவல்களும் குறித்த சந்தர்ப்பத்தின் போது பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஏ) | அறிவித்தல் பதாதை வருமானங்களை கணக்கு வைக்கும் போது அட்டுறு அடிப்படை கவனத்தில் கொள்ளப்படாமல் ரூபா 11.85 மில்லியன் ஆன முற்பணமாக கிடைத்த வருமானம், மீளாய்வாண்டின் வருமானமாக எடுக்கப்பட்டமையினால் ஆண்டின் வருமானம் மற்றும் இலாபம் என்பன அப்பெறுமானத்தால் அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பாக 2021 ஆம் ஆண்டு முதல் கணக்கீடு செய்வதற்கு முடியுமான வகையில் வருமானங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். முற்பணமாக கிடைத்த வருமானங்களை சரியாக கணக்கீடு செய்வதற்கு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஐ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்குகளில் காண்பிக்கப்படுகின்ற கட்டிடங்களின் பெறுமானத்தேய்வு ஒதுக்க | இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமானத்தேய்வு அளவுகளின் வேறுபாடு தவறினால் ஏற்பட்டிருந்ததுடன் | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இயலுமானவரை கணித ரீதியான வழுக்களை |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்ப மீதி, ஆண்டின் பெறுமானத்தேய்வு மற்றும் ஆண்டிறுதியில் பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தின் மீதி மற்றும் அதற்குரிய சொத்துப் பதிவேட்டின் மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 206.2 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 14 வாகனங்கள் தொடர்பாக அதிகாரசபையின் நிதிப் பிரிவின் மூலம் பராமரிக்கப்படுகின்ற சொத்துக்கள் பதிவேடு மற்றும் அந்த வாகனங்களுக்குரிய இயந்திரப் பிரிவினால் பராமரிக்கப்படுகின்ற ஏடு என்பவற்றுக்கிடையே ரூபா 26.33 மில்லியன் வேறுபாடு அவதானிக்கப்பட்டது. மேலும் அதிகாரசபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் நிதிப் பிரிவின் சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமையினால் வாகனங்களின் கிரயம் ரூபா 17 மில்லியனாலும், திரண்ட பெறுமானத்தேய்வு ரூபா 4.56 மில்லியனாலும் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | நாட்குறிப்பு இலக்கம் 108/J03-2020 இன் மூலம் சரிசெய்யப்பட்டுள்ளது. | குறைக்க வேண்டும். மேலும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேவையான சகல தகவல்களும் குறித்த சந்தர்ப்பத்தின் போது பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| (ஒ) | உள்நாட்டு வங்கி கடன் மூலம் நிதியத்தை வழங்குகின்ற மற்றும் அரசின் நிதியம் (GOSL) மூலம் மேற்கொள்ளப்பட்ட வீதி நிர்மாண செயற்திட்டங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 316.98 மில்லியன் தொகையான சொத்துக்கள் வீதி கிரயத்திலிருந்து அகற்றப்பட்டு தனியாக மூலதனமாக்கப்பட வேண்டிய போதிலும் அந்த சொத்துக்களுக்குரிய விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது உள்நாட்டு வங்கி நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களில் அநேகமானவை மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன் இதில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிக்குரிய அந்த பிரிவுகளின் தகவல்கள் கோரப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் உரிய தகவல்கள் கிடைத்ததன் பின்னர் அந்த சொத்துக்களும், சொத்துக்கள் பதிவேட்டில் தற்போதும் குறிப்பிடப்பட்டுள்ள | நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது தேவையான சகல தகவல்களும் குறிப்பிட்ட சந்தர்ப்பங்களின் போது பெறப்பட வேண்டியிருந்ததுடன் தேவையான தகவல்கள் கணக்காய்விற்கும் குறித்த பிரகாரம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |

உள்நாட்டு வங்கி நிதியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் இணக்கம் செய்யப்பட்டு தேவையான சீராக்கங்கள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும்.

## 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | | |
| வெளிச்சுற்றுவட்ட வீதி நிர்மாணம் III, தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு III மற்றும் தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு கட்டம் IV என்ற செயற்திட்டங்களின் கணக்குகள் மற்றும் இந்த செயற்திட்டங்களுக்குரிய அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் காணிபிக்கப்படுகின்ற மீதிகளுக்கிடையே வேறுபாடுகள் காணப்படுகின்றமை. | 145,485 | 158,658 | 13,173 | செயற்திட்ட தாரர்களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அறிக்கை பரீட்சித்து பார்க்கப்பட்டுள்ள துடன் மேலும் விளக்கமளித்தல்கள் செயற்திட்டத்தின் மூலம் பெறப்பட்டு வேறுபாட்டிற்குரிய சீராக்கங்கள் எதிர்காலத்தில் அதிகாரசபையின் கணக்குகள் மற்றும் நிதி அறிக்கைகளில் மேற்கொள்ளப்படும். | பூர்த்தி செய்யப்பட்ட செயற்திட்டங் களுக்குரிய சொத்துக்களின் மீதிகள் அதிகார சபையின் மீதியுடன் இணக்கம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 1.5.5 அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல்கள்

| அதிகாரபலமின்றிய கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டத்தின் 13 மற்றும் 14 ஆம் பிரிவுகள் மற்றும் 2011 நவம்பர் 18 ஆந் திகதிய 1732/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் அவ்வாறு சேகரிக்கப்படுகின்ற கட்டணங்கள் | அதிவேக வீதிகளிலிருந்து சேகரிக்கப்பட்ட கட்டண வருமானம் ரூபா 45,236 மில்லியன் வருமானத்தில் ரூபா 15,657 மில்லியன் தொகை மேற்கூறப்பட்ட வர்த்தமானி பத்திரத்தின் நியதிகளுக்கு புறம்பான | மேற்கூறப்பட்ட வர்த்தமானி பத்திரத்தின் பிரகாரம் சேகரிக்கப்படுகின்ற கட்டணங்கள் அதிகாரசபையின் நிதியத்திற்கு |

| | | |
|---|---|---|
| அதிகாரசபையின் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டியிருந்ததுடன் கட்டணம் அறவிட்டு தேசிய பெருந்தெருக்கள் அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக அந்த நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். | வகையில் அதிகார சபையின் மேந்தலைச் செலவினங்கள், சம்பளம் செலுத்துதல் மற்றும் செயற்திட்டங்களுக்குரிய கொடுப்பனவுகளுக்காகவும் பொலிஸ் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களுக்கான வசதிகளை வழங்குவதற்காகவும் செலவிடப்பட்டிருந்தது. | செலவு வைக்க வேண்டியிருந்த துடன் கட்டணத்தை அறவிட்டு தேசிய பெருந்தெருக்கள் அபிவிருத்திக்கும் மற்றும் பராமரிப்பிற்காகவும் அந்த நிதியம் பயன்படுத்தப்படல் வேண்டும். |

### 1.5.6 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா. மில்லியன் | | | |
| அதிவேக வீதியை நிர்மாணத்திற்காக செலவிடப்பட்ட பணம் அதிகாரசபையின் சொத்துக்களுக்கு கொண்டு வரப்பட்டு அரச மானியமாக எடுக்கப்பட்டிருந்தமை. | 394,470 | அரசாங்க மானியமாக கவனத்தில் கொள்ளக் கூடிய உபயோக ஆவணங்கள் | இது தொடர்பாக பொதுத் திறைசேரியின் அரச கணக்குகள் பிரிவுடன் கலந்துரையாடப் பட்டுள்ளதுடன் வரிசை அமைச்சின் அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அரசாங்க மானியமாக கவனத்தில் கொள்ளக் கூடிய ஏற்றுக் கொள்ள முடியுமான பயன்பாட்டு ஆவணங்கள் கணக்காய் விற்கு சமர்ப்பிக்கப் படல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபை மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பித்திருந்த நிதிக் கூற்றுக்களில் கடன்பட்டோரின் கீழ் ரூபா 29,819 மில்லியன் பெறுமதியில் தென் மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட | லலித் ஆதர் த சில்வா குழுவின் பரிந்துரையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமான தொகைக்காக கணக்குகளில் சீராக்கங்கள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்வதற்கு | உரிய பணம் அறவிடுதலை துரிதப்படுத்துதல் வேண்டும். |

| | |
|---|---|
| செயற்திட்டங்களுக்காக அதிகார சபைக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சு, முதலீட்டு சபை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சிலிருந்து ரூபா 1,060 மில்லியன் அறவிட வேண்டியிருந்தது. | முடியாதிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டம் | | | |
| 78(1) ஆம் பிரிவு | விலாகட்டுப்பொத்த - கணேவத்த - கும்புக்கெட்டே வீதிகளில் நிர்மாணிக்கப்படாத மதகுகளுக்காக சட்டத்தின் பிரகாரம் முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டிருக்க வில்லை. | இலக்கம் 12/1 மற்றும் 14/3 என்ற மதகுகளின் நிர்மாணம் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் கணக்காய்வு உத்தியோகத்தர்களின் பௌதீக பரிசோதனையின் போது வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்பட்டுள்ளது. எனினும், இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணித்து கொள்ளுமாறு உரிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கு எழுத்து மூலம் ஆலோனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய செயற்பாடுகள் தொடர்பாக சட்டத்தின் பிரகாரம் முற்பாதுகாப்பு நடவடிக்கைகள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) 1988 இன் 74 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2019 யூன் 30 ஆந் திகதியில் | சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்துதல் குறித்துரைத்த திகதிக்கு | இது தொடர்பாக மேற்கூறப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | 1975 இன் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களைளவெளிப்படுத்துதல் சட்டம் | உள்ளவாறு 506 உத்தியோகத்தர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்பு வெளிப்படுத்தல்கள் பெறப்பட்டிருக்கவில்லை. | முன்னர் பூர்த்தி செய்யப்பட்டு நிர்வாகப் பிரிவிற்கு வழங்குமாறு 2020.06.12 ஆந் திகதிய 2020/CL/28 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் சகல உத்தியோகத்தர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசு நிதிப் பிரமாணக் கோவை<br>-------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103(1) | குருணாகல் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்திற்குரிய நிலையான சொத்துக்கள், 2019 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான விடயங்களை கண்டறிவதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டு அந்த அறிக்கையை தாமதமின்றி சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | அதிகாரசபையின் சகல சொத்துக்களையும் வருடாந்த பொருள் மெய்மையாய்வு சபைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 104(3)(4) | வடமேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தில் 05 வாகனங்களுக்கு ஏற்பட்டிருந்த விபத்துக்களுக்குரிய பூரணமான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த அலுவலகத்தினால் வாகன விபத்துக்கள் தொடர்பாக பூர்வாங்க அறிக்கை மற்றும் ஆரம்ப அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர் வாகன விபத்துக்கள் தொடர்பாக பூரண அறிக்கையொன்றை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | வாகன விபத்துக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 104(3)(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 395 (அ)(இ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையில் 107 வங்கி நடைமுறைக் கணக்குகள் பேணிச் செல்லப்பட்டிருந்த | நிதிப்பிரமாணத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சகல நடைமுறை கணக்குகளுக்கும் உரிய வங்கி இணக்கக் கூற்றுக்கள் குறித்துரைத்த |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் அவற்றிற்குரிய வங்கி இணக்கக்கூற்றுக்கள் தாமதமாகி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | | திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 570 | வீதி அபிவிருத்தி அதிகார சபையில் பொறுப்புக் காலத்தை விஞ்சிய நிறுத்தி வைத்தல் வைப்புக்கள் ரூபா 1,010.17 மில்லியன் தொகை, பணிப் பொறுப்புக்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்கள் ரூபா 1,190.24 மில்லியன் மற்றும் ஏனைய வைப்புக்கள் ரூபா 361.22 மில்லியன் தொகை என்பன அதிகாரசபையின் வருமானத்திற்கு எடுக்கப்படாதிருந்ததுடன் மேலும் ரூபா 291.41 மில்லியன் தொகையான நிறுத்திவைத்தல் வைப்புக்களையும் வருமானத்திற்கு எடுக்கக் கூடியதாக இருந்த போதிலும் அவ்வாறு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | காலாவதியான நிறுத்தி வைத்தல் பணம் தொடர்பாக விரிவான பகுப்பாய்வின் பின்னர் அந்த பணத்தை அதிகார சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் அது தொடர்பாக சகல மாகாண பணிப்பாளர்கள் / பிரதான பொறியியலாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பொறுப்புக் காலத்தை விஞ்சிய நிறுத்தி வைத்தல் வைப்புக்கள், பணிப்பொறுப்புக்கள் பூர்த்தியான சேவைப் பங்களிப்பாளர் வைப்புக்கள் என்பன நிதிப் பிரமாணத்தின் 570 இன் பிரகாரம் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ---------------------- | | | |
| (i) | VI ஆம் | ஆளணிக் | புதிய பதவிகளுக்குரிய | ஆளணிக் |

| | | | | |
|---|---|---|---|---|
| | அத்தியாயத்தின் 04 ஆவது பிரிவு மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக் குழுவின் செயல் நடைமுறை விதிக் கோவையின் 88 ஆம் பிரிவு | கோவைகளை முறையாக உரிய நடைமுறையின் பிரகாரம் பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | ஊழியர்களை ஆட்சேர்க்கின்ற சந்தர்ப்பத்தில் அவர்களின் ஆளணிக் கோவையை தயாரிப்பதற்காக புதிய கோவைகள் பயன்படுத்தப்படுவதுடன் பல வருடகாலமாக பயன்படுத்தப்பட்டுள்ள பழைய ஆளணிக் கோவைகளை நாளதுவரையாக்குவதற்கு சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கோவைகளை முறையாக பேணிச் செல்ல வேண்டும். |
| (ii) | II ஆவது அத்தியாயத்தின் 05 ஆம் மற்றும் 06 ஆம் பிரிவுகள் | தாபன விதிக் கோவையின் 6.1.1, 6.13, 6.1.4 மற்றும் 6.1.6 இல் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர் சேவையில் 10 பேர்களுக்கும் மற்றும் அதிகாரசபையின் நிர்வாக சேவையில் 03 பேர்களுக்கும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. | பணிப்பாளர் சபை தீர்மான இலக்கம் 1450/2013 இன் மூலம் சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதன் கீழ் புதிய ஆட்சேர்த்தல் நடைமுறை அங்கீகாரம் பெறப்படும் வரை 2005 இன் ஆட்சேர்ப்பு நடைமுறையின் கீழ் பதவியுயர்வுகளை வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மேலும் 842/2005 ஆம் இலக்க பணிப்பாளர் சபை தீர்மானத்தின் பிரகாரம் 3:2 விகிதத்தின் கீழ் ஒரு தரத்தில் நீண்டகாலமாக வைத்து கொள்ளாமல் (Stagnate) பதவியுயர்வு வழங்குவதற்கு கிடைத்த அங்கீகாரத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சி பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தது. | நியமிக்கும் போதும் பதவியுயர்வின் போதும் தாபன விதிக் கோவையில் காண்பிக்கப் படுகின்ற குறித்துரைத்த ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை<br>------------------- | | | |
| (i) 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்கம் மற்றும் 2017 இன் பாதீட்டு முன்மொழிவு இலக்கம் 373 | மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்திலும், சகல வேலை பிரிவுகளிலும் சுற்றறிக்கையின் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | மேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தில் தற்போது கைவிரல் அடையாள இயந்திரம் பயன்படுத்தப்படுவதுடன் வேலை பிரிவுகள் தொடர்பாக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கைவிரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தல் தொடர்பாக மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 1 ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம் அதிகாரசபை மனித வள அபிவிருத்தி முறைமையொன்றை அறிமுகப்படுத்தாதிருந்த துடன் பதவியணியினருக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கோ அல்லது பதவியணியினர் மதிப்பீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கோ நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒட்டுமொத்த பதவியணியினர்களுக்காகவும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடும் திட்ட முறைமையொன்று எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் பதவியணியினர்களுக்காக வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கும் மற்றும் செயலாற்றல் மதிப்பீட்டு முறைமையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 5 ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க | மனித வள அபிவிருத்தி திட்டமொன்றை எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு தேவையான | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வில்லை. | நடவடிக்கைகள் எடுக்கப்படும். | எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | பொதுமுயற்சிக ள் சுற்றறிக்கை -------------------------- | | | |
| (i) | 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க சுற்றறிக்கையி ன் 9.12 ஆம் பிரிவு | நலன்புரி நடவடிக்கைகளுக்காக பொதுத் திறைசேரியின் முன்அங்கீகாரம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும் பதவியணியினர் போக்குவரத்து சேவைகளை வழங்குவதற்காக அவ் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை ல. | இது தொடர்பான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அதிகார சபையின் பணிப்பாளர் நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நலன்புரி நடவடிக்கை களுக்காக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும். |
| (ii) | மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையி ன் 9.3.1 ஆம் பிரிவு | வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் ஆட்சேர்ப்பு நடைமுறையொன்று தயாரித்து அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | தற்போதுள்ள நிர்வாகத் துறை தொடர்பாக அறிவுள்ள மதியுரையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பதவியணியினர் விபரம் தொடர்பாக வரைபு அறிக்கை முகாமைத்துவத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்பட்டவுடன் ஆட்சேர்ப்பு நடைமுறையை தயாரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மேலும் காலம் தாழ்த்தாமல் ஆட்சேர்ப்பு நடைமுறை யொன்றை தயாரித்து அங்கீகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 2019 மார்ச் 15 ஆந் திகதிய 01/2019 ஆம் | ஊழியர்களை செயற்திட்டத்திற்கு விடுவிக்கக் கூடிய | தற்போது வருடாந்த இடமாற்றங்களுக்கு மேலதிகமாக கட்டாய | ஊழியர்களை செயற்திட்டத்திற் கு விடுவிக்கும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | இலக்கம், முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.3(a),(b) பிரிவுகள் | காலம் 05 வருடங்களை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும் அவ்வாறு விடுவிக்கப்பட்ட நிரந்தர பதவியணியின் ஊழியர்களில் 477 பேர்களில் 306 பேர்களும் செயற்திட்டங்களுக்கு விடுவிக்கப்பட்டு 05 வருடகாலத்தை விஞ்சியிருந்தனர். | மாற்றங்களை மேற்கொள்வதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் கடந்த காலங்களின் போது சில பிரதேச அலுவலகங்களில் கட்டாய மாற்றங்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. செயற்திட்டத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் இந்த கட்டாய இடமாற்றங்களை அமுல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | போது சகலருக்கும் நியாயமான சந்தர்ப்பங்களை வழங்கக் கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த துடன் சுற்றறிக்கை யையும் பின்பற்றுதல் வேண்டும். |
| (ஏ) | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிர்வாக சுற்றறிக்கை | | | |
| (i) | 2019 ஒக்தோபர் 07 ஆந் திகதிய 2019/CL/68 ஆம் இலக்க சுற்றறிக்கை | பிரபல்யமான சேவை நிலையங்களில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்களை காலரீதியிலும் முறையான பிரகாரமும் இடமாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஒரே சேவை நிலையத்தில் 05 வருடங்களை விட மேற்பட்ட காலம் சேவையாற்றியுள்ள சகல ஊழியர்களும் வருடாந்த இடமாற்றத்திற்கு விண்ணப்பிக்க வேண்டியமை அறிவிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டிற்கான வருடாந்த இடமாற்றல் சுற்றறிக்கை விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இது தொடர்பாக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2018 யூன் 01 ஆந் திகதிய RDA/AO-06/MA27 ஆம் இலக்க | அதிவேக வீதியில் 395 பராமரிப்பு தொழிலாளர்களின் மிகையொன்று காணப்படும் போது | வருடாந்த இடமாற்றம் மற்றும் கட்டாய மாற்றத்தின் கீழ் இதனை சரிசெய்வதற்கு நடவடிக்கை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையின் அடிப்படையில் ஆட்சேர்ப்பினை |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை | 2019 ஆம் ஆண்டில் கூலி அடிப்படையில் மேலதிக தொழிலாளர்கள் வெளியிலிருந்து பெறப்பட்டமைக்காக ரூபா 482.93 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | மேற்கொள் வதற்கும் நிதியத்தை சரியாக முகாமைத்துவம் செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 நிதி விளைவுகள்**

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 145,373,392,899 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 21,455,896,525 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 123,917,496,374 அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு மாற்றல்கள் அல்லாத கொடுக்கல் வாங்கல்களில் எழுந்திருந்த அரசாங்க மானியம் வருமானமாக கருதி கணக்கு வைக்கப்பட்டமை பிரதான காரணமாக இருந்தது.

**2.2 பிரதான வருமானங்கள் மற்றும் செலவின விடயங்களின் முக்கிய பகுப்பாய்வு**

| விடயம் | 2019 ஆம் ஆண்டு | 2018 ஆம் ஆண்டு | 2018 ஆம் அண்டுடன் ஒப்பிடும் போது சதவீதத்தின் வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | சதவீதம் |
| அரசாங்க மானியம் | 169,117 | 26,136 | 547 |
| வட்டி வருமானம் | 1,067 | 776 | 37.5 |
| அபிவிருத்தி மற்றும் பராமரிப்புச் செலவினம் | 15,142 | 8,902 | 70 |
| நிதிச் செலவினம் | 15,866 | 17,362 | (09) |

பூர்த்தி செய்யப்பட்ட வீதி செயற்திட்டங்களை அதிகார சபைக்கு கையளிக்கும் போது அவ்வாறு கையளிக்கப்பட்ட சொத்துக்களுக்கு சமனாக அரசாங்கத்தின் மானியம் பிரதான வருமானமாக இனங்காணப்பட்டமையினால் அரசாங்க மானியம் மிகவும் கவனத்தில் கொள்ளக்கூடிய சதவீதத்தினால் உயர்வடைந்து சென்றிருந்ததுடன் அதிவேக வீதியின் முறைமையினை விரிவுபடுத்தியமையால் வருமானம் அதிகரித்ததன் காரணமாக நிலையான வைப்பு வட்டி வருமானம் உயர்வடைந்து சென்றிருந்தது.

அதிகாரசபை அமுல்படுத்திய ரன் வீதி செயற்திட்டம் வீதி நிர்மாணத்திற்கான கொடுப்பனவுகள் செலவினமாக பதிவழிக்கப்பட்டமையின் காரணமாக அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு செலவினங்கள் உயர்வடைந்து சென்றிருந்தது.

அதிகாரசபையின் கடன் செலுத்தும் கட்டமைப்பின் விளைவாக நிதிச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது குறைவடைந்திருந்தது.

## 2.3 விகிதாசாரப் பகுப்பாய்வு

| | 2019 | 2018 |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 2:1.69 | 2:1.54 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:1.67 | 1:1.52 |

நடைமுறை விகிதத்தை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நடைமுறை விகிதத்தில் எதோவொரு குறிப்பிடக்கூடிய அதிகரிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்ததுடன் விரைவுச் சொத்து விகிதமும் எதிர்பார்க்கப்பட்ட ஆகக்குறைந்த மட்டத்தை அடைந்திருந்ததுடன் அதுவும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது அதிகரிப்பைக் காட்டியது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் வெற்றிடம் காணப்படாத பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்குதல் மற்றும் பதவிகளை கையளித்து பதவியணியினர்கள் நியமிக்கப்பட்டு மேலதிகக் கொடுப்பனவின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நட்டம் ரூபா 3.9 மில்லியன் ஆகும். | எதிர்காலத்தில் நியமனங்களை வழங்கும் போது அங்கீகரிக்கப்பட்ட சம்பள குறியீட்டின் பிரகாரம் பதவியுயர்வு மற்றும் சம்பளங்களை வழங்குவதற்கும் அதிகார சபை இதன் பின்னர் நிதி ரீதியான நட்டமொன்று ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்குமாறும் உரிய பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்த சம்பள அளவிற்கு மாத்திரம் கொடுப்பனவு செய்தல், வெற்றிடமாக காணப்படாத பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்குதல் மற்றும் நியமனங்களை தடுத்தல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2008 இன் 40 ஆம் இலக்க தேசிய வீதிகள் சட்டம் | | |
| (i) 7(3) ஆம் பிரிவு<br>வீதி அபிவிருத்தி அதிகார சபை, உரிய மாகாண சபை, உரிய உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய முகவர் | வரிசை அமைச்சின் மூலம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ‘‘ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களினால் கையளிப்பதற்குள்ள மாவட்டத்தின் வீதி அபிவிருத்தி செயற்திட்டங்களில் குறிப்பிடப்பட்ட ‘‘ஒன்றிணைந்த வீதி முறைமை அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம்’’ தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | | திட்டம்’’ தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ii) | 6(1) ஆம் பிரிவு<br>உயர் வீதி முறைமை கொள்கையொன்றை தயாரிப்பதற்கும், தந்திரோபாய அபிவிருத்தி, வீதிகள் தொடர்பான ஆராய்ச்சி மற்றும் வீதி பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கை எடுத்தல், அதிகாரசபையினால் தொடர்புபடுத்தப்படுகின்ற வீதி திட்டங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சருக்கு ஆலோசனை வழங்குவதற்காக தாபிக்கப்பட வேண்டிய ‘‘வீதி முறைமை அபிவிருத்தி ஆலோசனைக் குழு’’ தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | வரிசை அமைச்சின் மூலம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ‘‘வீதி முறைமை அபிவிருத்தி மதியுரைக் குழு’’ தாபிப்பதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | 7(1) ஆம் பிரிவு<br>சகல மாவட்டங்களுக்காகவும் ஒன்றிணைந்த வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பிற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரித்தல், வீதி அபிவிருத்தி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை இணைத்தல் மற்றும் மேற்பார்வை, வீதி | வரிசை அமைச்சின் மூலம் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ‘‘மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி இணைப்புக் குழு’’ தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செயற்திட்டங்களை கையளித்தலை முறைமைப் படுத்துதல் மற்றும் செயற்திட்டத்தை கையேற்றல் தொடர்பாக அமைச்சருக்கு பரிந்துரைசெய்வதற்காக தாபிக்கப்பட வேண்டிய ‘‘மாவட்ட வீதி முறைமை அபிவிருத்தி இணைப்புக் குழு’’ தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (ஆ) | அதிகாரசபையின் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்படாமல் வீதி ஒதுக்க பிரதேசம் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளுக்காக வெளித்தரப்பினருக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்தக் காணி வாடகையாளர்களினால் உடன்படிக்கை செய்யப்பட்ட பணிகளுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக காணி பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபை அது தொடர்பாக எந்தவொரு நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. அவ்வாறே நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற 11 ஏக்கர் 02 றூட் 38.3 பேர்ச் அளவான ரூபா 123 மில்லியன் பெறுமதியான அத்திடிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணி தொழிற்பயிற்சி அதிகார சபை மற்றும் ஜேர்மன் தொழில்நுட்பக் கல்லூரியினால் உரிமை கோரப்பட்டிருந்ததுடன் எஞ்சிய காணிப் பகுதிகளில் அனுமதியற்ற நபர்கள் குடியிருந்து | அத்திடிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணி பேஸ் லைன் வீதி செயற்திட்டத்தின் அருகில் இருந்தவர்களை குடியமர்த்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இதுவரை அந்த செயற்திட்டத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் ஏற்படுகின்ற தேவைகளின் அடிப்படையில் கொள்வனவு செய்த நோக்கத்திற்காக காணியை பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் வளங்களை எதிர்பார்த்த நோக்கம் தொடர்பில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வருகின்றமை அறிக்கையிடப்பட்டிருந்தது. | | |
| (இ) | அதிகார சபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக கட்டளைகள் விநியோகிக்கின்ற சந்தர்ப்பம் முதல் அந்த சொத்துக்கள் அகற்றப்படும் சந்தர்ப்பம் வரையும், கட்டியெழுப்பப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நடைமுறை வேலைகள் முதல் மூலதனமாக்கல் வரை தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உங்களது கணக்காய்வு பந்தியுடன் முழுமையாக இணங்கவில்லை. எனினும் சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக முழுமையான முறைமையொன்றை தாபிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | பற்றுச்சீட்டுக்களை உறுதிப்படுத்துவதற்கு அசாதாரணமான காலமொன்றை எடுத்தமை மற்றும் தொலைத்தொடர்பு குறைபாடுகள் காரணமாக அதிகாரசபையின் கணக்குகள் துணைக் கம்பனிகளின் கணக்கு மீதிகளுக்கு இடையே போதியளவான இணங்காமைகள் காணப்பட்ட போதிலும் அந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக முகாமைத்துவம் இதுவரை பொருத்தமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சில துணைக் கம்பனிகள் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையுடன் இணக்கம் செய்து வேறுபாடுகள் இனங்காணப் பட்டுள்ளது. மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் இயந்திர உபகரண கம்பனியுடன் இணக்கம் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் இருதரப்பினராலும் ஒவ்வொரு மாதமும் கணக்கீடு செய்யப்படுகின்ற கொடுக்கல் வாங்கல்களை மாதாந்தம் இணக்கஞ் செய்வதற்கும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அதிகார சபையின் கணக்குகள் துணைக் கம்பனிகளின் கணக்கு மீதிகளுடன் தொடர்ச்சியாக இணக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிவேக வீதியின் முதலாவது கட்டத்தின் | அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட | செயல் திட்டத்தை சரியாக திட்டமிடல் |

உடன்படிக்கை இரத்துச் செய்யப்பட்டமையினால் 06 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்டம் தாமதம் அடைந்திருந்ததுடன் நிர்மாண ஒப்பந்தத்தில் அதிவேக வீதியில் 04 ஆவது பகுதியின் நிர்மாணத்தை மேற்கொண்ட கம்பனியின் வெளிப்படுத்தப்படாத செலவினங்களை தீர்ப்பதற்காக பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக அமைச்சரவை அங்கீகாரத்தின் அடிப்படையில் நிர்மாணக் கம்பனிக்கு ரூபா 158,386 மில்லியன் தொகை கையளிக்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்திற்காக நிதியத்தை பெறுதல் தொடர்பாக உறுதிப்பாடு ஒன்று காணப்படாமை மற்றும் நலிவான நிதி திட்டமிடல்களின் காரணமாக செயற்திட்டத்தின் செயற்பாட்டு அலகிற்காகவும் ரூபா 94.39 மில்லியன் தொகையும் மதியுரைச் சேவைக்காக ரூபா 392.64 மில்லியன் தொகையுமான விளைவற்ற செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரர்களின் பௌதீக செயல்முன்னேற்றம் மதியுரையாளர்களினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படாமல் ரூபா 449.02 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. ஒப்பந்தகாரர் தமது செலவினங்களை பெறக்கூடியதாகவிருந்த செயலாற்றல் பிணை காப்பீடு வேலை

செயற்திட்டத்தின் பெயர், நிதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு முன்னர் செயற்திட்ட முகாமைத்துவ அலகு தாபிக்கப்பட முடியும். மத்திய அதிவேக வீதியின் செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமைச்சரவை அங்கீகாரத்தில் தாபிக்கப்பட்டதுடன் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் பின்னராகும். செயற்திட்டத்திற்காக நிதிய ஒதுக்கத்தை உறுதிப்படுத்துதல் பொதுத் திறைசேரியின் வெளிவளத் திணைக்களத்தின் பொறுப்பாகும்.

மற்றும் நிதியத்தை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக உறுதிப்பாடு ஒன்று ஏற்படுத்தப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படல் வேண்டும். மேலும் சகல நேரங்களிலும் செயற்திட்டத்தின் ஒப்பந்தகாரர்களின் பௌதீக செயல் முன்னேற்றம் மதியுரையாளரினால் மதிப்பீட்டிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | அளவிடைப் பத்திரத்தின் வேலை விடயமொன்றாக காண்பிக்கப்பட்டு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே ஒப்பந்தகாரரால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஜயமினிக்க திட்டம் மற்றும் ஏனைய சகல திட்டங்களின் வேலைக்காக ரூபா 83.14 மில்லியன் வேலை அளவிடைப் பத்திரத்தில் சேர்க்கப்பட்டு ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மத்திய அதிவேக வீதியின் மூன்றாவது பகுதிக்காக காணிகளை கைப்பற்றுவதற்காக ரூபா 3,469.89 மில்லியன் செலுத்தப்பட்ட போதிலும் எந்தவொரு காணியும் கைப்பற்றுதல் சட்டத்தின் 44 ஆம் பந்தியின் பிரகாரம் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. மதியுரைக் கம்பனியால் கோரப்பட்டிருந்த ரூபா 161 மில்லியன் நிலையான கட்டளைகளின் செல்லுபடிக் காலம் கவனத்தில் கொள்ளப்படாமல் நடைமுறை வேலைகளில் சேர்க்கப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே செயற்திட்டத்தின் நிதியத்தின் கிடைப்பனவு தொடர்பாக உறுதிப்பாடு ஒன்று காணப்படாமை மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கை ஆலோசனைகளுக்கு முரணாக ரூபா 663.93 மில்லியன் செயற்திட்ட செயற்பாட்டு அலகிற்காக செலவிடப்பட்டிருந்தது. | காணி கைப்பற்றல் செயற்பாடுகளின் போது காணி கைப்பற்றல் உத்தியோகத்தராக உரிய பிரதேச செயலாளரே நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் நிர்மாணங்களை துரிதமாக ஆரம்பிக்கும் நோக்காகக் கொண்டு குழுவொன்றை நியமிப்பதற்கும், இழப்பீடொன்றை செலுத்துவதற்காகவும் முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. இற்றைவரையில் அதன் வட்டி செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட 181 காணி கூறுகளின் எண்ணிக்கையில் 48 கூறுகளை கையளிக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் வட்டி செலுத்தப்பட்டுள்ள சகல கூறுகளுக்ககாவும் 44 ஆம் பிரிவின் கீழ் கையளித்தல் செயற்பாடுகளை துரிதப்படுத்தி பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கி | செயற்திட்டத்தின் நிதியத்தின் பெறுவனவு தொடர்பாக உறுதிப்பாடு ஒன்றுடன் செயற்திட்டத்தை ஆரம்பித்தல் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஆலோசனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | மத்திய அதிவேக வீதியின் 04 ஆவது பகுதி பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக முழுமையாக அதிவேக வீதிக்காகவும் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்வதற்காக ரூபா 2,193 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்த போதிலும் செயற்திட்டத்தின் செயற்பாட்டு அலகிற்காக ரூபா 269.1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் காணிகளை கைப்பற்றுவதற்காக பல்வேறு அரசாங்க நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக ஊக்குவிப்பு படி ரூபா 5.1 மில்லியன் செலுத்தப்பட்டிருந்த போதிலும் காணி கைப்பற்றல் சட்டத்தின் 9 ஆவது பிரிவின் பிரகாரம் 1,667 காணிக் கூறுகளுக்காக பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு 10(1) ஆம் பிரிவின் பிரகாரம் 573 காணிக் கூறுகளுக்காக மாத்திரமே அறிவித்தல் கட்டளை விநியோகிக்கப்பட்டிருந்தது. முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு முரணாக 03 உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்பட்டு அவர்களுக்காக சம்பளமாக ரூபா 3.07 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் | 2012 முதல் 2015 வரை வடக்கு அதிவேக வீதிக்காக மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள ஆய்விற்கு செலவிடப்பட்ட கிரயம் வடக்கு அதிவேக வீதி செயற்திட்டத்தின் மூலமான கிரயமாக செலவிடப்பட்டிருந்ததுடன் அந்த செயற்திட்டம் 2015 ஆம் ஆண்டின் போது மத்திய அதிவேக வீதி செயற்திட்டத்தின் 04 முகாமைத்துவ அலகிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 2016.09.13 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தின் போது சீனாவின் கசோபா சர்வதேச பொறியியலாளர் தொகுதி கம்பனியின் தொழில்நுட்ப மற்றும் கூறுவிலை முன்மொழிவுகளைப் பெற்று மதிப்பீட்டிற்கு உட்படுத்துமாறு பரிந்துரை கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் 2016 யூலை மாதம் தாபிக்கப்பட்ட செயற்திட்ட முகாமைத்துவ அலகினால் செயற்திட்டத்திற்காக தேவையான காணி கைப்பற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. காணி கைப்பற்றல் செயற்பாடுகளை கைவிடாமல் முன்கொண்டு செல்வதற்காக செயற்திட்ட முகாமைத்துவ அலகு நடவடிக்கை எடுத்திருந்தது. | செயற்திட்டம் தொடர்பாக விளைவற்ற செலவினங்கள் ஏற்படாத வகையில் செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் காணிக் கைப்பற்றல் செயற்பாடுகளை துரிதப்படுத்தல் மற்றும் செலவினங்களை சரியாக முகாமைத்துவம் செய்தல் வேண்டும். |

அங்கீகாரமின்றி ஆட்சேர்க்கப்பட்டிருந்த மதியுரையாளருக்கு ரூபா 0.9 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெற்கு அதிவேக வீதியின் நீடிப்பு செயற்திட்டத்தின் பொறியியல் மதிப்பீட்டை தயாரிக்கும் போது தேவையின் பிரகாரம் சிக்கனமாக நடவடிக்கை எடுக்கவேண்டிய மாற்றுத்திட்டம் காணப்படும் போது முறையே ரூபா 23.8 மில்லியன் மற்றும் ரூபா 25 மில்லியன் வீதம் அதிசொகுசு வாகனங்களை கொள்வனவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 04/2019 மற்றும் நிதி, பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 07/2019 என்ற கடிதங்களின் பிரகாரம் தற்போது செயற்திட்ட அலுவலகத்தின் மூலம் வாகனங்கள் கொள்வனவு செய்தல் நிறுத்தப்பட்டுள்ளது. | பொறியியல் மதிப்பீடு தயாரிக்கும் போது தேவையின் பிரகாரம் சிக்கனமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மத்திய அதிவேக வீதியின் இரண்டாவது பகுதியின் மூலம் கைப்பற்றிக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்ட எந்தவொரு காணியும் காணிச் சட்டத்தின் 44 ஆவது உப பிரிவின் கீழ் பதிவுசெய்யப்பட்டிருக்காத போதிலும் அதற்காக ரூபா 16.44 மில்லியன் ஊக்குவிப்பு படியாக உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே நிர்மாண ஆலோசனைச் சேவைக்காக தேவையான 48 சிரேஷ்ட பொறியியலாளர்கள் மற்றும் உள்நாட்டு பொறியியலாளர்கள் மற்றும் 156 விசேட நிபுணர்கள் | காணிக் கைப்பற்றல் செயற்பாட்டின் போது காணிக் கைப்பற்றும் உத்தியோகத்தர்களாக உரிய பிரதேச செயலாளர்களே செயற்படுகின்றனர். தற்போது வரையில் அதன் வட்டி செலுத்தி பூர்த்தி செய்யப்பட்டுள்ள 181 காணிக் கூறுகளின் எண்ணிக்கையில் 48 கூறுகளை கையளிக்கும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் வட்டி செலுத்தப்பட்டுள்ள சகல காணி கூறுகளுக்காகவும் 44 ஆம் பிரிவின் கீழ் கையளித்தல் செயற்பாடுகளை துரிதமாக பூர்த்தி செய்வதற்கு செயற்திட்டம் முன்னுரிமை | கைப்பற்றப்பட்ட காணிகள் 44 ஆம் உப பிரிவின் கீழ் பதிவினை துரிதப்படுத்துதல். நிர்மாண ஆலோசனைச் சேவைக்காக உடன்படிக்கை மூலம் இணங்கப்படாத கொடுப்பனவுகளை தவிர்த்தல். மதியுரையாளரின் சுயாதீனத்தை பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுத்தல். |

| | | |
|---|---|---|
| சேவையில் ஈடுபடுத்தப்படாதிருந்த போதிலும் உடன்படிக்கையின் மூலம் இணங்கப்படாத 12 தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பொறியியலாளர் களுக்காக ரூபா 46 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மதியுரையாளரினால் மேலதிக கிரயமொன்று இன்றி மேற்பார்வை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் மதியுரைப் பதவியணியினரின் மேலதிக நேர கொடுப்பனவாக ரூபா 74.24 மில்லியன் தொகை ஒப்பந்தகாரரினால் செலுத்தப்பட்டிருந்த மையினால் மதியுரையாளரின் சுயாதீன தன்மையில் பிரச்சினைகள் எழக்கூடிய நிலைமை காணப்பட்டது. அவ்வாறே செயற்திட்டத்தில் காணிகளை கைப்பற்றும் உத்தியோகத்தர்களுக்காக ஒப்பந்தகாரர்களிடமிருந்து சம்பளம் பெறுகின்ற உத்தியோகத்தர்களை ஈடுபடுத்தி அதற்காக ரூபா 2.16 மில்லியன் ஒப்பந்தகாரரினால் செலுத்தப்பட்டிருந்தமை பிரச்சினைக்குரிய நிலைமையில் காணப்பட்டது. | வழங்கி நடவடிக்கை எடுக்கும். | |

## 3.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 நவம்பர் 30 ஆந் திகதியில் உள்ளவாறு அதிகாரசபையின் 09 | நேர்கூலி சம்பள slip முறைமையில் உரிய | விளைவற்ற பண மீதியை |

| | | |
|---|---|---|
| மாகாண பொறுப்பு பணிப்பாளர் அலுவலகம் மற்றும் அக்கரைப்பற்று அலுவலகம் என்பவற்றில் காணப்பட்ட 31 வங்கிக் கணக்குகளுக்குரிய ரூபா 309 மில்லியன் காசு மீதி காணப்பட்டதுடன் அத்திகதியில் சமர்ப்பிக்கப்படாத காசோலைகளின் மொத்த கூட்டுத்தொகை ரூபா 184 மில்லியன் ஆனமையால் ரூபா 125 மில்லியன் விளைவற்ற காசு மீதியொன்று நடைமுறைக் கணக்குகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | ஊழியர்களின் வங்கிக் கணக்குக்கு அனுப்புதல், உரிய வழங்குனர்களினதும் மற்றும் ஒப்பந்தகாரர்களினதும் கணக்குகளுக்கு உரிய கொடுப்பனவுகளை நேரடியாக வங்கிக் கணக்கிற்கு அனுப்புதல், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சேவைப் பங்களிப்பாளர் வைப்பு மற்றும் மேந்தலைச் செலவினங்கள் என செயற்படு நிலையில் உள்ள நடைமுறை கணக்குகளில் நாளாந்தம் காணப்பட்ட மிகைப் பணத்தை முதலீடு செய்யும் இயலுமை (Overnight REPO) மற்றும் திட்ட முறைமைகளுக்கு எடுத்தல், நடைமுறைக் கணக்குகளை பேணிச் செல்லல் என இலங்கை வங்கியுடன் கலந்துரையாடி முதலீடு செய்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுமென அறியத்தருகின்றோம். | நடைமுறைக் கணக்கில் நிறுத்தி வைக்காதிருத்தல் வேண்டும். |

**3.6 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2006 இன் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை<br>(i) 2.4.1 ஆம் பந்தி<br>ஒவ்வொரு கலண்டர் ஆண்டு ஆரம்பிக்கும் போதும் அந்த ஆண்டிற்காக பெறுகைக் குழு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டிற்காக வடமேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்திற்குரிய | 2019 ஆம் ஆண்டிற்காக “பிரதேச பெறுகைக் குழு” நியமிக்கப்பட்டிராததுடன் அந்த வருடத்திற்குரிய பெறுகைக் குழுவின் செயற் பொறுப்பு அந்த ஆண்டிற்கு முன்னர் நியமிக்கப்பட்ட குழுவினால் மேற்கொள்ளப்பட்டிருந்ததை அறியத்தருகின்றோம். 2020 ஆம் ஆண்டிற்காக | சகல கலண்டர் ஆண்டும் ஆரம்பிக்கும் போது அந்த ஆண்டிற்காக பெறுகைக் குழு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பிரதேச பெறுகைக் குழுவின் உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்துரைத்த பிரகாரம் பிரதேச பெறுகை குழுவின் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | |
| (ii) | 4.2.1 ஆம் பந்தி | | |
| | அதிகாரசபையினால் 2019 ஆம் ஆண்டினையும் உள்ளடக்கும் வகையில் பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான பிரதான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன் எதிர்வரும் 03 ஆண்டுகளுக்காக தேவையான பொருட்கள், சேவைகள் தொடர்பாக திட்டமொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரித்தல் வேண்டும். |
| (iii) | 5.3.11(அ) ஆம் பந்தி | | |
| | சகல கேள்விதாரர்களினால் குறித்துரைத்த மாதிரி படிவத்தின் பிரகாரம் கேள்வி காப்பீடொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் வடமேல் மாகாண பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பொருட்கள் மற்றும் சேவைப் பெறுகைகளுக்காக கேள்வி காப்பீடொன்று பெறப்பட்டிருக்கவில்லை. | நிர்மாண ஒப்பந்தத்திற்காக உரிய (Bid Security) பெறப்பட்டு உரிய கேள்வி மாதிரி படிவத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், எதிர்கால கேள்வி கோரலின் போது பொருட்கள் மற்றும் சேவைகளுக்காகவும் கேள்விப் பிணை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொருட்கள் மற்றும் சேவை பெறுகைகளுக்காக கேள்வி காப்பீடொன்றை குறித்த மாதிரி படிவத்தின் பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | 8.9.1 ஆம் பந்தி | | |
| | வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் வழங்குனர் நிறுவனங்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் வாடகை அடிப்படையில் வாகனங்களை பெற்றுக் கொள்ளும் தேவை ஏற்படுமாயின் ஒப்பந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வாடகை அடிப்படையில் வாகனங்களைப் பெற்றுக் கொள்வதற்குரிய வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வழங்குனர் நிறுவனங்களுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடல் வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 07 ஒப்பந்தங்களிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 48.56 மில்லியனுக்காக வேலை ஆரம்பித்தல் முற்பண காப்பீடொன்று பெற்றுக் கொள்வதற்கோ அல்லது தேவையான பிரகாரம் நீடிப்பு மேற்கொள்ளவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>அவ்வாறே அறவிட வேண்டிய மீதி ரூபா 64.96 மில்லியன் தொகையான 25 ஒப்பந்த வேலைகளை பூர்த்தி செய்யும் இலக்கிடப்பட்ட திகதியில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் வேலை ஆரம்பித்தல் முற்பண காப்பீடு செல்லுபடிக் காலத்தையும் விஞ்சியிருந்தது. | இதில் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு காரணங்களின் கீழ் ஆரம்ப முற்பணம் அறவிடப்படாமல் காணப்பட்டமை தற்போது இடம்பெறாதிருந்ததுடன் அவ்வாறு குறித்துரைத்த விதத்தில் பட்டியல்களில் இருந்து அறவிடுவதற்கோ அல்லது பிணைக் காப்பீட்டை பணமாக்கி கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்படும். | வேலை ஆரம்பித்தல் முற்பணக் காப்பீட்டை உரிய பிரகாரம் பெற்றுக் கொள்வதற்கும் தேவையான பிரகாரம் அவற்றை குறித்துரைத்த பிரகாரம் நீடித்துக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.8 ஏனைய அமைப்புக்களுக்கு விடுவிக்கப்பட்ட வளங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய பெருந்தெருக்கள் தொடர்பான செயற்திட்டத்தினால் ரூபா 2,664.05 மில்லியன் கிரயமொன்றை செய்து நிர்மாணிக்கப்பட்ட 252,055 சதுர அடி அளவான வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைமை அலுவலக கட்டிடத்தில் 28.7 சதவீதமான 72,400 சதுர அடி அளவு வீதி மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் பயன்படுத்தப்படுகின்ற போதும் அதற்காக வாடகையொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>எனினும் தலைம அலுவலக கட்டிடத்தில் இடவசதிகள் போதாமையினால் செத்சிறிபாய கட்டிடத்தில் 12,272 சதுரஅடி அளவு வீதி அபிவிருத்தி அதிகார | 2021 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டின் மூலம் நிதியேற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் கிடைக்கின்ற நிதியேற்பாட்டின் அடிப்படையில் கட்டிட வாடகையை செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பெருந்தெருக்கள் அமைச்சின் பிரதான நிதி உத்தியோகத்தரினால் எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர | சொத்துக்கள் மற்றும் பிரிந்து செல்லும் அபாயம் மற்றும் நலன்கள் கிடைக்கின்ற தரப்பினரை கவனத்தில் கொண்டு சொத்துக்களை இனங்காண்பதற்கு செயற்படல் வேண்டும். சொத்துக்கள் மற்றும் பிரிவுரீதியில் பகிரப்படும் செலவினங்களை மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| சபையின் அலுவலகத்தை பேணிச் செல்வதற்காக பயன்படுத்தப்பட்டு அதற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 27.27 மில்லியன் வாடகையொன்றை அதிகாரசபை செலுத்த வேண்டியேற்பட்டிருந்தது. | அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடத்தில் தற்போது 12,272 சதுரஅடி அளவில் 5,272 சதுர அடி அளவு அந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளான வீதிகளை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் துறைகளுக்கு நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்ற பொறியியல் சேவையினதும் தொழில்நுட்ப சேவையினதும் வெற்றிடங்கள் 221 ஆக காணப்பட்டது. மேலும் அத்திகதியில் 36 பொறியியல் உத்தியோகத்தர்கள், 420 முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்கள், 402 அலுவலக உதவியாளர்கள் மற்றும் 395 பராமரிப்பு தொழிலாளர்களின் மிகையும் காணப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் ஊழியர் சம்பளத்திற்காக அந்த ஆண்டிற்காக அதிகாரசபைக்கு ஏற்பட்ட ஒட்டுமொத்த செலவினம் ரூபா 11,866.2 மில்லியன் ஆக இருந்ததுடன் அந்த செலவினங்களை தீர்த்து வைப்பதற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப் பெற்ற அரசாங்க மானியங்களின் பெறுமதி ரூபா 6,500 மில்லியன் மாத்திரமாக இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்குகின்றோம். அதிகாரசபைக்கு தேவையான போதியளவிலான பதவியணியினரை கணிப்பிடுவதற்காக நிர்வாகத் துறை தொடர்பாக அறிவுள்ள ஆலோசனையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளதுடன் பதவியணியினரின் எண்ணிக்கை தொடர்பான வரைவு அறிக்கை முகாமைத்துவத்திற்கு தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் சரியான ஊழியர் எண்ணிக்கை தீர்மானிக்கப்பட்டு அது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபையின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளான வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு துறைகளுக்கு நேரடியாக தாக்கமளிக்கின்ற பொறியியல் சேவையினதும் தொழில்நுட்ப சேவையினதும் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையில் சகல ஆட்சேர்ப்புக்களை யும் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.10 வாகன முறைமை முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற ஒரே தரத்தின் உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு பெறுமதியுடைய வாகனங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் வாகன ஒதுக்கீடுகள் தொடர்பாக இணங்கப்பட்ட பொதுக் கொள்கையொன்று காணப்படவில்லை. | இயந்திர பிரிவினால் 2020 ஆம் ஆண்டில் வாகனங்களைப் பயன்படுத்துதல் தொடர்பான கொள்கை வரைபொன்று ஏனைய பிரிவுகளின் கருத்துரைகளை பெற்று மீண்டும் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர் களுக்கு வாகனங்களை ஒதுக்குதல் தொடர்பாக இணங்கப்பட்ட பொதுக் கொள்கை ஒன்றின் பிரகாரம் மேற்கொள்ளுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 முகாமைத்துவ தகவல் முறைமையின் வினைத்திறன்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அதிகாரசபையினால் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பான கட்டளைகளை விநியோகிக்கும் சந்தர்ப்பம் முதல் அந்த சொத்துக்கள் அகற்றப்படும் சந்தர்ப்பம் வரையும், கட்டியெழுப்பப்படுகின்ற சொத்துக்கள் தொடர்பாக நடைமுறை வேலைகள் முதல் மூலதனமாக்கல் வரையும் தேவையான ஒழுங்குகளை மேற்கொள்ளும் வகையில் சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உங்களின் கணக்காய்வு பந்தியுடன் பூரணமாக இணங்கவில்லை. எனினும், சொத்துக்கள் முகாமைத்துவம் தொடர்பாக முழுமையான முறைமையொன்றை தாபிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சபைக்காக பொருத்தமான சொத்துக்கள் முகாமைத்துவ முறைமையொன்றை உடனடியாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |